## வாசிப்பின் அவசியம் எனும் உரையாடலை நிறைவு செய்க.

மாலதி : வணக்கம் அருணா.

அருணா : வணக்கம் மாலதி.

மாலதி : நீ பேச்சுப்போட்டியில் '__________________ அவசியம்' பற்றிப் பேசி பரிசு வாங்கியுள்ளாய். ஆகவே அதைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள விழைகிறேன்.

அருணா : "நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்", என்றார் ___________________________ . போற்றத்தக்க இவ்வரிகளே வாசிப்பின் பெருமையை நமக்கு உணர்த்தும்.

மாலதி : பள்ளியில் தினமும் பலவிதமான புத்தகங்களைப் படிக்கிறோமே. அவை போதாதா?

அருணா : அவை அந்தந்தப் பாடங்கள் சம்பந்தப்பட்ட _____________________ நமக்குத் தரும். தேர்வுக்கு நம்மைத் தயார்படுத்தும். அதுமட்டும் போதாது. பாடங்கள் சம்பந்தப்பட்ட அதிகமான தகவல்களைப் பெற நாம் வேறு பல நூல்களை வாசிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மாலதி : ஆம், அருணா. நானும் பல வெற்றியடைந்த பிரபலங்கள் நேர்காணலில், "நான் நிறைய வாசிப்பேன்; அதனால் தான் இந்த வெற்றி" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால்.... என்ன தொடர்பு.

அருணா : அவரவர் விரும்பிய ஆர்வமுள்ள ___________________ சார்ந்த புத்தகங்களை வாசிப்பதால் அத்துறைகளைப் பற்றிய கூடுதல் தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. அது பொது அறிவை வளர்க்கிறது.

மாலதி : நம் __________ வளரவும் வாசிப்பு அவசியம் தானே?

அருணா : நிச்சயமாக. ஒரு மொழியில் புலமை பெற அம்மொழியில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். அதனால் மொழி வளத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். சிறந்த எழுத்தாளர்கள் இப்படித்தான் உருவாகிறார்கள்.

மாலதி : __________________ வாசிக்க வேண்டுமா ? அருணா

அருணா : கண்டிப்பாக, _____________________ படைப்புகளும் மிகவும் அவசியம். சொந்தமாகக் கதை, கட்டுரை, கவிதை எழுத விரும்புகிறவர்கள் முதலில் அவை தொடர்பான பல நூல்களைப் படித்து அறிய வேண்டும். அப்போதுதான் சொந்தப் படைப்புகளைப் படைக்கும் போது ___________________ இருக்கும்.



LIVEWORKSHEETS


மாலதி : மிகவும் நன்றி அருணா. வள்ளுவர்

**தொட்டனைத் தூறும் _______________ ___________________**

**கற்றனைத் தூறும் அறிவு.**

என்றதற்கேற்ப பல நூல்களை வாசித்து இனி நானும் அறிவைப் பெருக்கிக் கொள்வேன்.

அருணா : நன்றி மாலதி.




| | | |
|---|---|---|
| ஆபிரகாம் லிங்கன் | மணற்கேணி | வாசிப்பின் |
| துறைகளைச் | அறிவையே | மாந்தர்க்குக் |
| தரமானவையாக | சொற்களஞ்சியம் | எழுத்தாளர்களும் |
| மொழி | | |



LIVEWORKSHEETS